**கவனிக்க.-** *11.07.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1872 - 2014 ජූලි මස 18 වැනි සිකුරාදා - 2014.07.18

*1872 ஆம் இலக்கம் – 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1064 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1068 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1074 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1064 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, ஓகத்து மாதம் 8 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, யூலை மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

**3 எண்ணிக்கையுள்ள Motor Trolleys ஆகியவற்றை வடிவமைத்து, தயாரித்து, வழங்கி மற்றும் செயற்படுத்தற்கான பெறுகை**

பெறுகை இல. : எஸ்ஆர்எஸ்/எப். 7079

இலங்கைப் புகையிரத சேவைகளுக்கு 3 எண்ணிக்கையுள்ள Motor Trolleys ஆகியவற்றை வடிவமைத்து, தயாரித்து, வழங்கி மற்றும் செயற்படுத்தற்கான உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை, கொழும்பு 10, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சு, அமைச்சு பெறுகைக் குழுவின் தவிசாளர் பெற்றுக் கொள்வார்.

உற்பத்தியாளர்கள், அவர்களினால் அற்றோணித் தத்துவம் வழங்கப்பட்ட தராதர அங்கீகாரமுள்ள முகவரொருவரின் மூலமாக அவர்களின் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 2014.08.05 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. இலங்கைப் பணத்தில் பத்தாயிரம் ரூபாவைச் (10,000 ரூபா) செலுத்திய பின்னர் 2014.06.23 ஆந் திகதியிலிருந்து 2014.08.04 ஆந் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் மு. ப. 9.00 மணிக்கும் பி. ப. 3 மணிக்குமிடையில் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சர் அலுவலகத் திலிருந்து பெறக்கூடிய விலைமனு ஆவணத்தினுடனான படிவங்களி லேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வெளிநாட்டு விலைமனுதாரர்கள் திட்டவட்டமாக குறிக்கப்பட்ட நாட்களில் இலங்கைப் பணம் பத்தாயிரம் ரூபாவிற்கு (10,000 ரூபா) வெளிநாட்டுப் பணத்தில் இலகுவில் மாற்றக்கூடிய சமமான தொகையை அவர்களின் நாடுகளி லுள்ள இலங்கைத் தூதுவராலயங்களில் செலுத்திய பின்னர், இலங்கை யிலுள்ள தூதுவராலயத்தின் ஊடாக இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரை விலைமனு ஆவணங்களை வழங்கும்படி கோரிக்கையொன்றைச் சமர்ப்பிக்கலாம். மேலே குறிப்பிட்டுள்ள இலங்கைப் பணத்திலான பத்தாயிரம் ரூபாவானது (10,000 ரூபா) அல்லது அதற்குச் சமமான இலகுவில் மாற்றக்கூடிய வெளிநாட்டு பணமானது மீளளிக்கப்படாத தொன்றாகும்.)

4. விலைமனுக்களை இலங்கை, கொழும்பு 10, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சில் மூடியவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும்போது, விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அனுமதிபெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம். அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம் :-

தவிசாளர்,
அமைச்சு பெறுகைக் குழு,
போக்குவரத்து அமைச்சு,
இல. 1, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனு ஆவணங்களை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வருபவருடன் தொடர்புகொள்ளவும் :-

புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலை திணைக்களம்,
த. பெ. இல. 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு,
இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94(11)2438078 அல்லது 94(11)2473328.
தொலைநகல் இல. : 94(11)2432044.
மின்-அஞ்சல் : srs.slr@gmail.com
gmrslr@sltnet.lk
இணையத்தளம் : www.railway.gov.lk

தவிசாளர்,
அமைச்சு பெறுகைக் குழு,
போக்குவரத்து அமைச்சு.

தொடர்பிலக்கம் : எஸ்ஆர்எஸ்/எப்/7079.

7-415

# ஆய விற்பனையும் குத்தகையும்

**பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2015**

2015, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2015, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982, ஓகத்து 2 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2014.08.01 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ள கூடிய குறித்த விண்ணப்பப்படிவத்தை முறைப்படி பூர்த்திசெய்து இங்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரப் படிவத்துடன் வருமான சான்றுப்பத்திரத்துடன் முத்திரையிடப்பட்ட கடித உறையின் மேல்

இடது மூலையில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள தவறணையின் இலக்கத்தின் பெயரையும் தெளிவாகக் குறிப்பிட்டு அந்த தவறணைக்காகவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பவோ அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுவதன் மூலமோ பதுளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திர படிவங்களைப் பூரணப்படுத்தும்போது கேள்விப்பத்திரப் படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது சுருக்க கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2014.08.01 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இந்தப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. ஏதேனும் விடயமொன்றினைக் குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்குண்டு.

6. முன்குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2014.10.16 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

7. ஒருவர் ஆய உரித்தினை பெற்றுக்கொண்டார் என பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன்னதாக அவர் பதுளை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாத கட்டணத்திற்கு கூடுதலான தொகையை என்னிடம் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைப்பத்திரத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் சம்பந்தமாக தெரிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களை பதுளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2013, யூன் 14.

**அட்டவணை**

**பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2015**
(2015.01.01 ஆந் திகதி தொடக்கம் 2015.12.31 ஆந் திகதிவரை)

| தொடர் இல. | தவறணையின் பெயர் மற்றும் இலக்கம் | பிரிவு | தவறணை அமைக்க வேண்டிய பிரதேச செயலாளர் பிரிவு | தவறணையை திறக்க வேண்டிய நேரம் | தவறணையை மூடும் நேரம் | கேள்விப் பத்திர வைப்பு | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படும் திகதியும் நேரமும் | மீண்டும் விற்பனை செய்யும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பதுளை 1 | பதுளை | பதுளை மாநகர சபை இல. 6 ஐக் கொண்ட பிரிவிக் ஹுணுகொட்டுவ எனும் பெயருடைய அரச காணி | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | ரூ. 5,000 | 2014.08.01 ஆந் திகதி மு. ப. 10.30 | 2014.10.16 |

## பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனை - 2015

*1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பின்னைய காலப்பகுதிக்கும் கள்ளுத் தவறணை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் செல்லுபடியாகும் சகல மதுபான அனுமதிப்பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் பொது மதுபான வரி நிபந்தனைகளுக்கிணங்க 2015 ஆம் ஆண்டுக்குள் மதுபான (கள்ளு) சில்லறை விற்பனைக்கான வரப்பிரசாதங்களை விலைக்கு வாங்குவதற்காக பேருவளை பிரதேச செயலாளராகிய என்னால் 2014ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 05 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. சகல கேள்விப்பத்திரங்களும் நாட்டின் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் தயாரிக்கப்படுவதோடு -*

*(அ) கேள்விப்பத்திர வைப்புப்பணமாக எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய கேள்விப்பத்திர பணம் வைப்புச்செய்து அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டையும் (ரசீத்) ;*

*(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணி, நிலம் ஆகிய நிரந்தர சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட கேள்விதாரரின் வருமானம் பற்றிய சான்றிதழ்களையும் முன்வைக்க வேண்டும்.*

*கேள்விப்பத்திரமும் வருமானச் சான்றிதழும் முன்வைப்பது சம்பந்தமாக மேற்குறிக்கப்பட்ட மதுபான விற்பனைக்கான நிபந்தனைகள் முறையாக பேணப்பட வேண்டுமென்பதை கேள்விப்பத்திரதாரர்களுக்கு ஆணித்தரமாக வலியுறுத்தப்படுகிறது. கேள்விப்பத்திரம் பூர்த்தி செய்யப்படும்போது கேள்விப்பத்திரதாரர் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்:-*

*(1) கேள்விப்பத்திரம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும்போது அதிலே குறிக்கப்பட்டுள்ள பணத்தினை இலக்கத்திலும் எழுத்திலும் குறிக்கப்படல் வேண்டும்.*

*(2) பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களில் குறிக்கப்பட்ட சாட்சியாளரின் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.*

*(3) கோடிட்டு வெட்டப்பட்டுச் செய்யப்படும் சகல திருத்தங்களும் கேள்விப்பத்திரதாரரின் குறுகிய கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.*

*மேற்குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு பூர்த்தி செய்யப்படாத கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.*

*3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரம் -*

*(அ) கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்புச் செலுத்தப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டும் (ரசீத்) ;*

*(ஆ) வருமானச் சான்றிதழோடும்,*

*4. கடித உறையில் இட்டு முத்திரை பதிக்கப்பட வேண்டும் (சீல்) அக்கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் 'மதுபான விற்பனை நிலைய இலக்கமும் பெயரும்' குறிப்பிடப்பட்டு பேருவளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் கேள்விப்பத்திரம் கோரும் கடைசி நேரத்திற்கு முன்னதாகவே இடப்பட வேண்டும். அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.*

*5. சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பிய கேள்விப்பத்திரதாரர் "தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர்" எனப் பிரகடனப் படுத்தப்பட்ட பின் அத்தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் ஒரு தொகைப் பணம் முற்பணமாக பேருவளை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்து கீழ்க்காணும் மதுபானம் சேகரித்து விற்பனை செய்வது சம்பந்தமான நிபந்தனைகளுக்கு கைச்சாத்திடல் வேண்டும். இக்கட்டுப்பணமானது பணமாக அல்லது 'வங்கியில் செலுத்தப்படத்தக்க' எனக் குறிக்கப்பட்டு காசோலை மூலமாகவோ, மக்கள் வங்கி மூலமாகவோ அல்லது "பாதுகாப்புடைய காசோலை" என்ற பெயரில் செலுத்தப்பட்ட காசோலை மூலமாகவோ அல்லது அவ்வங்கியின் பெயரில் செலுத்தப்பட்ட காசோலையாகவோ இருத்தல் வேண்டும்.*

*6. குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத மதுபான விற்பனை நிலையம் 2014.10.02 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரம் இவ்வர்த்தமானிக்கு அமைவாக முன்வைக்கப்படல் வேண்டும்.*

*7. மேலதிக விபரங்கள் தேவைப்படின் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*ஜனக ஸ்ரீசந்த்ரகுப்த,*
*பிரதேச செயலாளர்,*
*பேருவளை.*

*பேருவளை,*
*பிரதேச செயலகம்,*
*2014, யூலை 02.*

### அட்டவணை

| தொடர் இல. | பிரிவு | கிராமம் | மதுபான நிலையம் திறக்கப்படும் நேரம் | மதுபான நிலையம் மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதித் திகதி | மீண்டும் விற்பனை செய்யும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பேருவளை பிரதேச சபைப் பிரிவு | அளுத்கம உபபிரிவு எல்லைக்குள் | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 இரவு 8.00 | 2,000 | 2014 ஓகத்து, 05 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | 2014, ஒற்றோபர் 02 ஆந் திகதி மு. ப. 10.30 மணி |

**குறிப்பு** : 2015 ஆம் ஆண்டிற்கு தற்போது மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடத்தை மீண்டும் பெற்றுக்கொள்வது உறுதி செய்யப்படமாட்டாது. புதிய இடங்களில் மதுபான விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்படுமாயின் அது சம்பந்தமாக பேருவளை பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

7-580

---

### வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணைகள் குத்தகை வழங்குதல் - 2015

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதும், 1983 ஆம் ஆண்டுக்காகவும் மற்றும் அதன் பிந்திய காலப்பகுதிக்காகவும் வரையறுக்கப்பட்ட கள்ளுத்தவறணைக்கான குத்தகை கொடுத்தல் நிபந்தனைகளுக்கும், அக்காலப்பகுதிக்குள் வரையறுக்கப்பட்ட ஏனைய அனைத்து கள்ளுத்தவறணை நிபந்தனைகளுக்கும் உட்பட்டு 2015 ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் காணப்படும் கள்ளுத்தவறணைகளை சில்லறைக்கு விற்பதற்கான தனிப்பட்ட உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக 2014, ஓகத்து மாதம் 11 ஆந் திகதி கீழ்க்குறிப்பிட்டுள்ள நேரம் வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது.

2. (அ) கேள்விப்பத்திரங்களை இலங்கையில் உள்ள எந்தவொரு பிரதேச செயலகங்களிலும் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுமதிக்கப்பட்ட படிவத்தில் மாத்திரம் பூர்த்திசெய்யப்படல் வேண்டும் ;

(ஆ) பிணைப் பணத்தினை இலங்கையில் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு குத்தகைப் பணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும் ;

(இ) குத்தகைதாரரின் அசைவற்ற ஆதனங்கள் பற்றிய சான்றிதழ்களை அவ் அசைவற்ற ஆதனங்கள் அமைந்திருக்கும் பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரரின் சொத்துடைமைச் சான்றிதழ்களை சமர்ப்பிப்பதன் மூலம் மேற்குறிப்பிட்டுள்ள கள்ளுத் தவறணைகள் குத்தகைக்கு வழங்குதல் பற்றிய நிபந்தனைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும் என்று குத்தகைதாரர்களுக்கு அறியத்தரப்படுகிறது ;

(ஈ) கேள்விதாரர் கேள்விப்பத்திரங்களைப் பூர்த்திசெய்யும்போது பின்வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றுதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அதில் குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ii) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களில் குறிப்பிட்ட சாட்சியாளர்களின் கையொப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடப்படல் வேண்டும் ;

(iii) கேள்விப்பத்திரத்தில் ஏதேனும் திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விதாரரின் கையொப்பத்தையும், திகதியையும் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும் ;

(iv) கேள்விதாரர்கள் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களுடன் தனது தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. முறையாக பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப் பத்திரத்திற்காக வைப்பு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு சொத்துடைமை சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரை இடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் தவறணைக்கான பெயரையும் இலக்கத்தையும் குறிப்பிட்டு வலப்பனை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில், கேள்விகள் பெறப்பட வேண்டிய இறுதித் தினத்திற்கு

முன் இடப்படல் வேண்டும் அல்லது தபால் மூலம் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் குறித்த தினத்தில், இறுதி நேரத்துக்கு முன் கிடைக்கும்படி பதிவுத்தபாலில், ''பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், வலப்பனை, நில்தண்டாஹின்ன'' என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரம் பற்றிய விபரம் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நேரத்தில் கேள்விதாரர்கள் வலப்பனை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் காரணமின்றி ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ பிரதேச செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரராக அறிவிக்கப்பட்ட தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன் பிணைப்பணமாக வலப்பனை பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட மூன்று தவணைகளுக்கு குறைவடையாத பணத்தை பிரதேச செயலாளருக்கு செலுத்தல் வேண்டும். இப்பணத்தை பிரதேச செயலாளரின் பெயரில் நில்தண்டாஹின்ன மக்கள் வங்கியில் உள்ள கணக்கிடுவதற்காக பணமாகவும் அல்லது ''வங்கி மூலமாக செலுத்துவதற்கு'' எனக் குறிப்பிடப்பட்டுள்ள காசோலை மூலமாக அல்லது மக்கள் வங்கி அல்லது இலங்கை வங்கியின் ''பாதுகாப்பான காசோலை'' மூலமாக செலுத்தப்படல் வேண்டும். தேவைப்படும் முத்திரைகளை இட்டு கேள்விதாரர் நிபந்தனைகளிலும் ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

7. ஒத்துக்கொள்ளப்படும் தவணை கேள்விக் கட்டணத்தைப் பணமாகச் செலுத்த முடிந்தவர்கள் மாத்திரம் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரங்கள் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவ் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரி தெளிவாக குறிப்பிப்படல் வேண்டும்.

9. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2014.10.09 ஆந் திகதி முற்பகல் 10.30 மணியளவில் விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகை கொடுப்பது தொடர்பான இறுதி தீர்மானம் பிரதேச செயலாளருடையதாகும்.

11. இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதேச செயலக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐ. கே. ஜீ. முத்துபண்டா,
பிரதேச செயலாளர்,
வலப்பனை.

பிரதேச செயலகம்,
வலப்பனை.
2014, யூலை 07.

**அட்டவணை**

| குறியீட்டு இல. | தவறணையின் பெயர் | தவறணை அமைந்துள்ள இடம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியும் இறுதி நேரமும் | கேள்விப்பத்திர பிணைப்பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 04 | ஹரஸ்பெத்த | ஹரஸ்பெத்த கிராமத்தில் | 2014.08.11 மு. ப. 10.30 | 5,000 |
| 05 | பதியபெலெல்ல | பதியபெலெல்ல கிராமத்தில் | 2014.08.11 மு. ப. 10.30 | 5,000 |

7-608

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

சிலாபத்தில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. பீ. தபரேரா அவர்களால் தயாரிக்கப்பட்ட 2011.08.26 ஆந் திகதி உரோமில் அமைந்துள்ள இலங்கைத் தூதரக அலுவலகத்தில் கையொப்பம் இடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட விசேட அற்றோணிப் பத்திரத்தின் மூலம் கட்டுனேரிய, பஹல கட்டுனேரிய, இல. 189/4 இல் வசிக்கும் (தற்போது VIA. PIETROCASTELLI-306, MESSINA, ITALY) ஹேவா கீகயனகே சாமன் பிரசன்ன ஆகிய என்னால் கட்டுனேரிய, பஹல கட்டுனேரிய, இல. 189/4 இல் வசிக்கும் கட்டுநாயக்ககே சாகரிகா விஜித தர்ஷனி பெரேரா என்பவருக்கு அளிக்கப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன் என்பதை சகலருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். இது 2011.09.13 ஆந் திகதி டீ.பீ. இல. 2418 இன்கீழ் 46/3007 ஆம் இலக்க படிவத்தில் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

எச். சீ. பிரசன்ன.

7-419/1

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

சிலாபத்தில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. பீ. தபரேரா அவர்களால் தயாரிக்கப்பட்ட 2012.04.11 ஆந் திகதி உரோமில் அமைந்துள்ள இலங்கைத் தூதரக அலுவலகத்தில் வைத்து கையொப்பம் இடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட விசேட அற்றோணிப் பத்திரத்தின் மூலம், கட்டுனேரிய, பஹல கட்டுனேரிய, இல. 198/ 4 இல் விலாசமுடைய (தற்போது VIA PIETROCASTELLI-306, MESSINA, ITALY) ஹேவா கீகயனகே சாமன் பிரசன்ன ஆகிய என்னால் கட்டுனேரிய, பஹல கட்டுனேரிய, இல. 189/4 இல் வசிக்கும் கட்டுநாயக்ககே சாகரிகா விஜித தர்ஷனி பெரேரா என்பவருக்கு அளிக்கப்பட்ட அற்றோணிப் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன் என்பதை சகலருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். இது 2012.06.11 ஆந் திகதி டீ. பீ. இல. 1815 இன்கீழ் 54/3769 ஆம் இலக்க படிவத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

எச். சீ. பிரசன்ன.

7-419/2

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

செலான் வங்கி பீஎல்சீ, கம்பனிப் பதவிலக்கம் பீகியு 9, செலான் கோபுரம், இல. 90, காலி வீதி, கொழும்பு 3

பிரசித்த நொத்தாரிசு வீ. ஏ. பரணகம அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 2012, ஓகத்து 2 ஆந் திகதி கொழும்பில் செலான் வங்கி பீஎல்சீ இனால் (வங்கி) வழங்கப்பட்ட 65 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவம் 2014, யூன் 11 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்யப்பட்டு வறிதாக்கப்பட்டது என்பதை இவ்வங்கிப் பணிப்பாளர் சபை இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றது.

செலான் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) என். என். நஜுமுதீன்,
கம்பனிச் செயலாளர்.

2014, யூன் 27.

7-393

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பீகல் ஃபிலீட் மெனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 98511
கூட்டிணைப்புத் திகதி : 09.05.2014
பதிவு முகவரி : இல. 171, டீன்ஸ் வீதி, கொழும்பு 10

கம்பனிச் செயலாளர்.

7-422

---

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : நெக்ஸ்ட் டெலிவிஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 92701
திகதி : 27.05.2013
கம்பனியின் அலுவலக பதிவு முகவரி : இல. 23பி, மிஷன் வீதி, கோட்டே

பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 45, பிரே புரூக் வீதி,
கொழும்பு 2.

7-423

---

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. டீ. டிலுக்ஷி ஷானிகா விஜயசிங்கவினால் 2013 ஆம் ஆண்டு தை மாதம் 28 ஆந் திகதிய 242 ஆம் இலக்கமுடைய அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணி தத்துவப்பத்திரம் இலக்கம் 266/4, டீன்ஸ் றோட், கொழும்பு 10 இல் உள்ள பெத்தா வடுகே சுஹான் சுசந்த டி சில்வாவினால் இலக்கம் 224, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2 இல் உள்ள பாலகிருஷ்ணன் சசிகுமாருக்கு வழங்கப்பட்டது. அவ் அற்றோணித் தத்துவம் இல்லாதொழிக்கப்பட்டு வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

பாலகிருஷ்ணன் சசிகுமாருடன் சம்பந்தப்பட்ட எந்தக் கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பு ஏற்க மாட்டேன் என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெத்தா வடுகே சுஹான் சுசந்த டி சில்வா.

7-444

---

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

பொரலஸ்கமுவ, பெப்பிலியான, கொழும்பு வீதி, 362 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த தயா கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகிய நாங்கள், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு சுஷ்மி வாசனா கப்புவெல்ல என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 36 ஆம் இலக்கமும் 2013, மே 16 ஆந் திகதியிடப்பட்டதும் தெஹிவளை, களுபோவிலை, சுனிந்தராம வீதிக்கு அப்பால் ஹொஸ்பிட்டல் ரெரஸ், 19/6ஏ ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சமிந்திர கிலிட்டுவாகமகே என்பவருக்கு எவ்வித கேள்வி ஆவணங்கள் தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளுக்கும் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் உடனடியாக செயல்வலுப் பெறும் வகையில் இரத்துச்செய்யப்பட்டுள்ளதென சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இத்தால் அறிவிக்கின்றோம்.

தயா கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்.

7-442

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

பொரலஸ்கமுவ, பெப்பிலியான, கொழும்பு வீதி, 362 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகிய நாங்கள், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கஷ்மி வாசனா கப்புவெல்ல என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 51 ஆம் இலக்கமும் 2014, பெப்புருவரி 26 ஆந் திகதியிடப்பட்டதும் மஹரகம, இசிப்பத்தானராம வீதி, 77/3 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ரன்தொடகே பெனெற் மென்டிஸ் குணவர்தன என்பவருக்கு எவ்வித கேள்வி ஆவணங்கள் தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளுக்கும் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் உடனடியாக செயல்வலுப் பெறும் வகையில் இரத்துச்செய்யப்பட்டுள்ளதென சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இத்தால் அறிவிக்கின்றோம்.

ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்.

7-441/1

---

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

பொரலஸ்கமுவ, பெப்பிலியான, கொழும்பு வீதி, 362 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகிய நாங்கள், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கஷ்மி வாசனா கப்புவெல்ல என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 50 ஆம் இலக்கமும் 2014, பெப்புருவரி 26 ஆந் திகதியிடப்பட்டதும் தெஹிவளை, களுபோவில, சுனந்தாராம வீதிக்கு அப்பால் ஹொஸ்பிட்டல் ரெரஸ், 19/6ஏ ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சமிந்திர கிலிட்டுவாகமகே என்பவருக்கு எவ்வித கேள்வி ஆவணங்கள் தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளுக்கும் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் உடனடியாக செயல்வலுப்பெறும் வகையில் இரத்துச்செய்யப்பட்டுள்ளதென சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இத்தால் அறிவிக்கின்றோம்.

ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்.

7-441/2

---

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

பொரலஸ்கமுவ, பெப்பிலியான, கொழும்பு வீதி, 362 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகிய நாங்கள், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கஷ்மி வாசனா கப்புவெல்ல என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 48 ஆம் இலக்கமும் 2014, சனவரி 20 ஆந் திகதியிடப்பட்டதும் பத்தரமுல்லை, விக்கிரமசிங்கபுர, 9 ஆவது ஒழுங்கை, 51/10சீ ஆம் இலக்கத்தைச் சேர்ந்த புளத்வத்த வளவ்வே கித்சிரிநிசாட் திசநாயக்க என்பவருக்கு எவ்வித கேள்வி ஆவணங்கள் தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளுக்கும் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் உடனடியாக செயல்வலுப் பெறும் வகையில் இரத்துச்செய்யப்பட்டுள்ளதென சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இத்தால் அறிவிக்கின்றோம்.

ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்.

7-441/3

---

## கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : விடாவெல் (பீவீரீ) எல்ரீடி
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 99045
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.06.10
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 15/10யூ, ஒபவத்த வீதிக்கு அப்பால், மாதிவெல, கோட்டே

விடாவெல் (பீவீரீ) எல்ரீடி என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பி டபிள்யூ கோர்ப்பரேட்
செக்ரட்டேரியல் (பீவீரீ) எல்ரீடி
கம்பனிச் செயலாளர்கள்.

2014, யூலை 02.

7-469

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : பெட்டா மல் இன்டர்நஷனல் (பீவீரீ) எல்ரீடி
*கம்பனியின் பதிவிலக்கம்* : பீவீ 93164
*பதிவுத் திகதி* : 2013, யூலை 05
*பதிவு முகவரி* : இல. 118, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு 11

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

7-472

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனி பெயர்* : எஸ். எல். ப்ரொபெசனல் இன்ஜினியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கூட்டிணைக்கப்பட்ட இலக்கம்* : பீவீ 99295
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2014.06.24
*பதிவு அலுவலகம்* : இல. 175/சீ, 3, கங்காராம றோட், கோவின்ன, கட்டுநாயக்க

கம்பனிச் செயலாளர்கள்.

7-475

## பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட கம்பனி சம்பந்தமாக பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஜொலங்கா றிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 99296
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 24.06.2014
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசம் : இல. 94, பாமங்கடை வீதி, கிருலப்பனை, கொழும்பு 6

(திருமதி) எச். எம். ஈ. டி. எச். கும்புருலந்த,
சட்டத்தரணி,
கம்பனிச் செயலாளர்.

ஜொலங்கா றிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

7-484

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நாலவலான, கோணவிலவில் வதியும் வைத்தியதிலக்க முனிகே நிஷான் சஞ்ஜீவ சில்வா ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். நயோமி சேனாநாயக்கவினால் எழுதப்பட்டு ரோமில் இலங்கை உயர் ஸ்தானிகர் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட வெளிநாட்டு அற்றோணித் தத்துவம் மூலம் அற்றோணி தத்துவதாரராக இல. 18/பி, ஏக்கர் 21, தெமட்டபிட்டிய, லுணுவிலவில் வதியும் கனேகொடகே ரொஹான் கிரிஷாந்த பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த உரிமை மற்றும் அதிகாரங்கள் 2014.04.24 ஆந் திகதி தொடக்கம் இரத்துச்செய்யப்பட்டு, இல்லாதொழிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. எம். நிஷான் சஞ்ஜீவ சில்வா.

7-548

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் கூட்டிணைத்தல் பற்றி பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : அவர்த்தா ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 98807
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 28.05.2014
பதிவுசெய்யப்பட்ட முகவரி : கந்தஹேன எஸ்ட்டேட், கனேமுல்ல, முத்தாரகம

கம்பனியின் பெயர் : ட்ரைடென் கெப்பிட்டல் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 98798
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 28.05.2014
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 27/1, பெப்பிலியான வீதி, நெதிமாலை, தெஹிவளை

கம்பனியின் பெயர் : சயுரி மோட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 98952
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 05.06.2014
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 90/10, வாசனாவத்த, மெத்தேகொட, பொல்கஸ் ஓவிட்ட

டபிள்யூ. எஸ். வீரமன்,
கம்பனிச் செயலாளர்.

இல. 27/1, பெப்பிலியான வீதி,
நெதிமாலை, தெஹிவளை

7-523

---

## பொது அறிவித்தல்

ஜோர்ஜ் ஸ்டுவேர்ட் கெபிரெல் (பீவீரீ) எல்ரீடி

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி பதிவுசெய்யப்பட்டமை தொடர்பாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

ஜோர்ஜ் ஸ்டுவேர்ட் கெபிரெல் (பீவீரீ) எல்ரீடி என்ற பெயரிலான புதிய நிறுவனமொன்று 2014, யூன் மாதம் 10 ஆந் திகதி பீவீ 99059 எனும் பதிவிலக்கத்தில் இல. 94ஏ, தர்மபால மாவத்தை, கொழும்பு 7 எனும் அதன் புதிய முகவரியில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஜோர்ஜ் ஸ்டுவேர்ட் அன்ட் கம்பனி லிமிட்டெட்,
புதிய நிறுவனத்துக்கான செயலாளர்கள்.

ஸ்டுவேர்ட் இல்லம்,
இல. 45, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1.

7-520

---

## அறிவித்தல்

பிரண்டிக்ஸ் எக்ஸ்பிரஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ 61188), பிரண்டிக்ஸ் அப்பரல் சொலூஷன்ஸ் லிமிட்டெட் (பீபி 185) கம்பனிகளை கூட்டிணைத்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின்கீழ் மேலே குறிப்பிடப்பட்ட கம்பனிகளை கூட்டிணைத்தல் தொடர்பாக வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாக அவை கூட்டிணைக்கப்பட்டு, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1)(a) ஆம் பிரிவின்கீழ் 2014, யூன் 14 ஆந் திகதி முதல் கம்பனிகளைப் பதிவுசெய்யும் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர் : பிரண்டிக்ஸ் அப்பரல் சொலூஷன்ஸ் லிமிட்டெட் (பீபி 185)

*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 409, 3 ஆவது மாடி, காலி வீதி, கொழும்பு 3

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரண்டிக்ஸ் மெனேஜ்மென்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

7-555

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

| கம்பனியின் பெயர் | கம்பனி இலக்கம் | பதிவுசெய்யப் பட்ட முகவரி |
|---|---|---|
| எக்வா ஜெம் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 96965 | இல. 38/B, சுபத்ராராம, மகுலுவ, காலி |
| குளோரியா கிரேன்ட் ஹொட்டெல் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 97056 | 'நந்தன', மீபாவள, போத்தல, கோட்டை, காலி |
| கிரீன்த கன்த (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 97020 | இல. 77, லைட் ஹவுஸ் வீதி, கோட்டை, காலி |
| எம்எஸ்எம்என்ஸ்டோர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 97490 | இல. 36, 2 ஆம் லேன், கட்டுகொட, காலி |
| ரஸ்ஸாக் ஜெம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 97926 | இல. 220, 3, போபெ வீதி, பியதிகம, கிந்தோட்டை, காலி |
| கோல் இன்ஸய்டர் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 98259 | இல. 77, லைட் ஹவுஸ் வீதி, கோட்டை, காலி |
| டிமெக் விலா (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 98475 | இல. 77, லைட் ஹவுஸ் வீதி, கோட்டை, காலி |
| பீ ஆர் ஜெம் அன்ட் ஜுவலரி (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 98900 | இல. 15, பள்ளி வீதி, பேருவளை |
| எப். ஏ. டீ. ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 98745 | இல. 77, லைட் ஹவுஸ் வீதி, கோட்டை, காலி |
| லங்காலேன்ட் பெக்-பெகர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 99235 | இல. 77, லைட் ஹவுஸ் வீதி, கோட்டை, காலி |
| லாஹ் பிசினெஸ் புறோசஸிங் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 99078 | இல. 4, த அல்விஸ் சதுரங்கம், கல்கிசை |
| லிஓவா லெஷர் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 99087 | இல. 77, லைட் ஹவுஸ் வீதி, கோட்டை, காலி |
| சுன்டிஓ இன்வெஸ்ட்-மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 99253 | இல. 77, லைட் ஹவுஸ் வீதி, கோட்டை, காலி |

எம். என். அசோசியேட்ஸ் மெனேஜ்மென்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

இல. 51, மூன்றாம் ஒழுங்கை,
கட்டுகொடை, காலி.

7-550

---

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கோட்டே, கோட்டே வீதி, இலக்கம் 653/4ஏ இல் வசிக்கும் சிறிசேன கன்னங்கர விஜேதுங்க ஆகிய என்னால் பிரசித்திபெற்ற நொத்தாரிசு பி. ஏ. டீ. அனுஷா எம். ரணசிங்ஹ பெரேரா என்பவரால் 2010.07.29 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 434 கொண்ட அற்றோணி அதிகாரத்தின் மூலம் கோட்டே, கோட்டே வீதி, இலக்கம் 653/4ஏ இல் வசிக்கும் பெந்தரகே சாந்தனி மல்காந்தி அல்விஸ் என்பவருக்கு அதிகாரத்தை வழங்கிய அற்றோணி அதிகாரப் புத்தகத்தின் 58 ஆம் அத்தியாய 59 ஆவது பக்க நாளேட்டின் இலக்கம் 6376 மற்றும் 2010.10.07 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள அற்றோணி அதிகாரத்தை 2014.07.03 ஆந் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வண்ணம் வலுவிழக்கச் செய்து மேற்படி அற்றோணி அதிகாரி பெந்தரகே சாந்தனி மல்காந்தி அல்விஸ் என்பவரால் இதன் பின்னர் எனது அற்றோணி அதிகாரியாக செய்யப்படுகின்ற எந்த செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்புக்கூற மாட்டேன் எனும் அடிப்படையில் முடிவுறச் செய்து இரத்துச்செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

சிறிசேன கன்னங்கர விஜேதுங்க.

7-590

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அங்கொடை, கொத்தட்டுவை, கொடவெல இல. 269/10 இல் குடியிருக்கும் கல்சேனகே சஞ்சய அருண குமார த அல்விஸ் (தே. அ. அ. இல. 713333050V) ஆகிய நான் கிரிதிவெல, தியவால, இல. 138 இல் குடியிருக்கும் கல்ஹேனகே மஞ்சுளா (தே. அ. அ. இல. 797252662V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு எஸ். பி. கருணாரத்ன அவர்களால் 2013.08.04 ஆந் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட இல. 575 என்ற அற்றோணி தத்துவப்பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இத்தால் இரத்துச்செய்கிறேன்.

கல்சேனகே சஞ்சய அருண குமார த அல்விஸ்.

7-591

## கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கொகோவெர்ட் (பீவீரீ) எல்ரீடி
பதிவு அலுவலக முகவரி : இல. 235, புத்தளம் வீதி, வாரியபொலை
கம்பனியின் இலக்கம் : பீவீ 98244
கூட்டிணைப்புத் திகதி : 2014, ஏப்பிறல் 23

சீஏஎஸ் கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பீவீரீ) எல்ரீடி,
கம்பனிச் செயலாளர்கள்.

7-577

## கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பிரிவை டெக்ஸ்ட் (பீவீரீ) எல்ரீடி
பதிவு அலுவலக முகவரி : இல. 3-3/1, புகையிரத நிலைய வீதி, கொழும்பு 3
கம்பனியின் இலக்கம் : பீவீ 98412
கூட்டிணைப்புத் திகதி : 2014, யூன் 19

சீஏஎஸ் கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பீவீரீ) எல்ரீடி,
கம்பனிச் செயலாளர்கள்.

7-576

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சில்வர்லைன் ட்ரான்ஸ் போடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 96065
கூட்டிணைப்புத் திகதி : 17.12.2014
பதிவு முகவரி : இல. 176, ஜம்புகஸ்முல்ல மாவத்தை, நுகேகொடை

ஆரியபால பெத்மகே,
கம்பனிச் செயலாளர்கள்.

7-561

## அறிவித்தல்

தப்றோபான இன்ரநஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
(கடன் கொடுத்தோர் தன்னிச்சையான ஒடுக்குதல்)

கம்பனியின் பதிவு இல. பீவீ 2714

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின்கீழ், கலைப்பாளர் நியமனம் பற்றி இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-

கொழும்பு 10 (டார்லி வீதி), ரீ. பி. ஜயா மாவத்தை, இல. 311, இலங்கை வங்கி மேர்ச்சண்ட் டவர்ஸ் இல் அமைந்துள்ள தப்றோபான இன்ரநஷனல் (பிறைவேட்) எனும் கம்பனியின் கடன் கொடுத்தோரின் 2014, ஆனி 30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக மேற்படி கம்பனியின் கலைப்பாளராக 4 ஆம் மாடி, இல. 2, காசல் ஒழுங்கை, கொழும்பு 4, அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட் ஐச் சேர்ந்த ஜீ. ஜே. டேவிட் ஆகிய நான் நியமிக்கப் பட்டுள்ளேன் என சகலருக்கும் அறியத்தருகிறேன்.

ஜீ. ஜே. டேவிட்,
கலைப்பாளர்,
தப்றோபான இன்டர்நஷனல்
(பிறைவேட்) லிமிட்டெட்.

மே./பா., எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ்,
ரீஸ்ரக்ஷர் அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி,
லெவல் 4, இல. 2, காசல் லேன்,
கொழும்பு 4,
2014, யூலை 3.

7-558/1

## அறிவித்தல்

தப்றோபான இன்ரநஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்

கம்பனியின் பதிவு இல. பீவீ 2714

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 320(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் விசேட தீர்மானம் பற்றி இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-

2014 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட கம்பனி கடன் கொடுத்தோர் தன்னிச்சையான ஒடுக்குதல் பற்றிய விசேட தீர்மானம்

மேற்படி கம்பனியானது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 333 ஆம் பிரிவின்கீழ், கடன் கொடுத்தோரின் தன்னிச்சையான ஒடுக்குதல் மூலம் கலைக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எச். வை. கலேலி,
தலைவர்,
பணிப்பாளர் சபை.

7-558/2

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி 2014 ஆம் வருடம் ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சிலோன் டிஜிடல் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்

கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 98193

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2014.04.21

பதிவு முகவரி : இல. 121, பாலவேல்ல வீதி, பத்தரமுல்லை

கம்பனிச் செயலாளர்.

7-585

## ஏல விற்பனைகள்

### டீஎப்சீசீ வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்துக்களும் இயந்திர உபகரணங்களும் ஏல விற்பனை**

***1799, 631 மற்றும் 562 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

**முதலாவது அட்டவணை**

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வல்கம்பற்று கோரளே, தேவமெதிஹத்பத்து, கொலமுன்ன கிராமத்தில் அமைந்துள்ள கொலமுனேவத்த எனவும், நந்தனவத்த எனவும் அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆரியதாச அத்தபத்து அவர்களால் வரையப்பட்ட 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதியிடப்பட்ட 11/2005 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக் கப்பட்டதுமான காணித்துண்டு அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள் அனைத்தும் அடங்கலாக.**

**(காணியின் விஸ்தீரணம் : 2ஏ. 2றூ. 32.5பே.)**

**இரண்டாவது அட்டவணை**

| தொடர் இல. | எண்ணிக்கை | விபரம் |
|---|---|---|
| 1 | 1 | கொயர் டஸ்ட் குரோ பாக் மெஷின்<br>உற்பத்தி செய்த நாடு : இலங்கை<br>மாதிரி : M 300<br>கொள்ளளவு : மணித்தியாலத்திற்கு 120 குரோ பாக்<br>சக்தி : ஹைட்ரோலிக் அன்ட் 20 HP மோட்டர் |
| 2 | 1 | கொயர் டஸ்ட் குரோ பாக் மெஷின்<br>உற்பத்தி செய்த நாடு : இலங்கை<br>கொள்ளளவு : மணித்தியாலத்திற்கு 120 குரோ பாக்<br>சக்தி : ஹைட்ரோலிக் அன்ட் 20 HP மோட்டர் |
| 3 | 1 | பேல் மாஸ்டர் - பைபர் பேல் பிரஷ் மெஷின்<br>உற்பத்தி செய்த நாடு : இலங்கை<br>மாதிரி : M 120<br>உற்பத்திப் பரிமாணம் : 50 x 58 x 60cm3<br>சக்தி : ஹைட்ரோலிக் அன்ட் 40 HP மோட்டர் |
| 4 | 1 | பேல் மாஸ்டர் - பைபர் பேல் பிரஷ் மெஷின்<br>உற்பத்தி செய்த நாடு : இலங்கை<br>உற்பத்திப் பரிமாணம் : 30 x 30 x 28$cm^3$ |
| 5 | 1 | மெட்லர் ரொலேடோ டிரக் ஸ்கேல் - 30T கொள்ளளவு (வே. பிரிட்ஜ்)<br>உற்பத்திப் பரிமாணம் : 7m x 3m<br>உற்பத்தி செய்த நாடு : இலங்கை<br>சக்தி : மின்சாரம் |
| 6 | 1 | டொயோட்டா பிராண்ட் போக்லிப்ட் |
| 7 | 1 | கட்டிங் மெஷின், லோகலி பப்ரிகேட்டட் |
| 8 | 1 | குரோ பாக் கட்டிங் மெஷின், லோகலி பப்ரிகேட்டட் |
| 9 | 2 | பெலட் டிரக் |
| 10 | 6 | கொகனட் ஹஸ்க் கட்டிங் மெஷின், லோகலி பப்ரிகேட்டட் |
| 11 | 1 | பேல் மெஷின் 25Kg<br>உற்பத்தி செய்த நாடு : இலங்கை<br>உற்பத்திப் பரிமாணம் : 27m x 27$cm^2$<br>கொள்ளளவு : மணித்தியாலத்திற்கு 80 முதல் 100 குரோ பாக்<br>சக்தி : ஹைட்ரோலிக் அன்ட் 30 HP மோட்டர் |
| 12 | 5 | கொகனட் ஹஸ்க் கட்டிங் மெஷின், லோகலி பப்ரிகேட்டட் |
| 13 | 1 | ஸ்க்வீசிங் மெஷின் போர் கொயர் டஸ்ட் அன்ட் கிரஷ் |

*(கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதியிடப்பட்ட 1799 ஆம் இலக்க பிணை உறுதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டீ. எஸ். பீ. கொடித்துவக்கு அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதியிடப் பட்ட 631 ஆம் இலக்க பிணை உறுதி மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. டீ. ஏ. வீ. விஜேகோன் அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதியிடப்பட்ட 562 ஆம் இலக்க பிணை உறுதி என்பன மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்/1938 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின்கீழ் கூட்டிணைந்த பீவீ 10977 ஆம் இலக்கத்தில் (முன்னைய பதிவிலக்கம் என் (பீவீஎஸ்) 41285) பதிவுசெய்யப்பட்ட வாரியப்பொல வீதி, கட்டுபொத்த, குருநாகல் என்ற முகவரியில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட கொயெல்கோ (தனியார்) நிறுவனம், முன்னர் வரையறுக்கப்பட்ட கெயார் லங்கா (தனியார்) நிறுவனத்தினால் டீஎப்சீசீ வங்கிக்கு (முன்னர் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்) அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து)*

டீஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2014 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 6 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 86,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூவுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
122 வருடகால சேவை அனுபவம்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

7-543

---

**டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ**

(முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வர்தன வங்கி என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துக்கள் ஏல விற்பனை**

***1118, 1415, 1426 மற்றும் 1675 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

**மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், தொலுவ பிரதேச செயலாளர் பிரிவு, உடபலாத்த, கந்துகர பஹல கோரளே, மெகொடகலுகமுவ கிராமத்தில், மெகொடகலுகமுவ கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட "ஒலிகொடபிட்டியேஹேன" என அழைக்கப்படும், (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. ஆர். டபிள்யூ. எம். வீரக்கோன் அவர்களால் வரையப்பட்ட 1985 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதியிடப்பட்ட 2205 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 மற்றும் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் ஜீ. டபிள்யூ. விஜேவர்தன அவர்களால் வரையப்பட்ட, 1997 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதியிடப்பட்ட 5343 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 12 ஆகிய காணித்துண்டுகளின் ஒன்றிணைந்ததும் மீள் அளவை செய்யப் பட்டதும்) அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் சரத் வெலகெதர அவர்களால் வரையப்பட்ட, 2000 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதியிடப்பட்ட 3654 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 36 எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட காணித்துண்டு அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக 3654 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய மேற்குறிப்பிடப்பட்டுள்ள இந்தக் காணி சீ181/283 ஆம் இலக்கத்தில் கம்பளை காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப் பட்டுள்ளது.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 12பே.)**

*(கண்டி பிரசித்த நொத்தாரிசு சுஜானி ஹப்புதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதியிடப்பட்ட 1118 ஆம் இலக்க பிணை உறுதி, 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதியிடப்பட்ட 1415 ஆம் இலக்க பிணை உறுதி, 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந்*

*திகதியிடப்பட்ட 1426 ஆம் இலக்க பிணை உறுதி மற்றும் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆந் திகதியிடப்பட்ட 1675 ஆம் இலக்க பிணை உறுதிகள் என்பனவற்றின் மூலம் இல. 3/11, ஸ்ரீ அமரவன்ச மாவத்தை, பேராதனை என்ற முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட அத்துகல பிரியநாத் கருணாரத்ன மற்றும் மனோமி சத்துரங்கி அர்சகுலசூரிய எனவும் மனோமி சத்துராணி அர்சகுலசூரிய அவர்களால் டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ இற்கு அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து)*

டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ இனால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2014 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 5 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 80,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வர்தன வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
122 வருடகால சேவை அனுபவம்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

7-544

---

**மக்கள் வங்கி - மாறவில கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் காணிப்பதிவக எல்லைகளுக்கு உட்பட்ட வடக்கு பிட்டிகல் கோரளே, யஹம்பத்துவ மற்றும் முன்னேஸ்வரம் ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் கருக்குவ மற்றும் கல்ஹிட்டியாவ ஆகிய கிராமங்களில் உள்ள கலஹிட்டியாவ தோட்டம் எனவும் கருக்குவ தோட்டம் எனவும் அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஏ. விமலசேன அவர்களால் வரையப்பட்ட, 2000 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதிய, 2187டீ ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 5 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக் கப்பட்டதுமான காணித்துண்டு. அதிலுள்ள மரங்கள், தோட் டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கியதாக சிலாபம் காணிப்பதிவகத்தில் ஆர் 44/287 மற்றும் சீ 192/240 ஆகிய இலக்கங்களில் பதிவுசெய்யப்பட்டது.**

**(காணியின் விஸ்தீரணம் : 13ஏ. 0றூ. 0பே.)**

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.**- மாறவில கிளையிலிருந்து சிலாபம் நோக்கி 12 கிலோ மீற்றர் வரை செல்லவும். கலஹிட்டியாவ-மாதம்பேயில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் (கோவிலுக்கு அருகில்) வலதுபக்கமாக உள்ள பிரதேச சபை வீதிக்குத் திரும்பி, அங்கிருந்து சுமார் 700 மீற்றர் வரை சென்றதும் குறிப்பிட்ட சொத்து வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2014 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 7 ஆந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- தீர்மான அறிவித்தலுக்கு தயவுசெய்து 2014, சனவரி மாதம் 17 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2014, சனவரி 24 ஆந் திகதிய ''தினமின'', ''டெயிலி நியூஸ்'' மற்றும் ''தினகரன்'' ஆகிய செய்திப் பத்திரிகைகளைப் பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக முழுமையாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி, விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் இல. 79, மாறவில வீதி, நாத்தாண்டியவிலுள்ள மக்கள் வங்கிக் கட்டடத்தின் முதலாம் மாடியில் இருக்கும் மக்கள் வங்கி, பிரதேச தலைமை அலுவலகத்தின் பிரதேச முகாமையாளரிடம் செலுத்தப்பட வேண்டும். தொலைபேசி இல. : 032-2253300, 032-2253301 ; தொலைநகல் இல. : 032-2255247.

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் மேற்கூறப்பட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
122 வருடகால சேவை அனுபவம்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680 2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

7-545

---

**ஹட்டன் நஷனல் வங்கி பி.எல்.சி. – மாத்தளை கிளை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு (மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை வடக்கு, தம்புள்ளை பிரதேச செயலாளர் பிரிவு, வகபனஹ பள்ளேசிய பற்று, தமுலுஓய என்ற திட்டவெல்கொல்ல கிராமத்தில் அமைந்துள்ளதும், தற்போது "விஜேசிறிவத்தை" என அறியப்படுகின்ற "வம்பட்டுயாய, பளுகஹ யாய, பளுகந்தயாய, கலயாய மற்றும் கொஸ்வத்தேமுல்லேகும்புர" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவை யாளர் ஏ. எம். அனுரரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு, 2000, சனவரி 31 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 670 இல் குறிப்பிடப்பட்டு துண்டு இல. 1 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 2றூ. 25பே.)**

(கடப்பாடுடையவரான ஷமிந்த ஜனக்க தும்பேபோவிலவிற்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பி.எல்.சி. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.**- தம்புள்ளை நகரிலிருந்து மாத்தளை வீதி வழியே களுன்தெவ சந்திவரை ஏறக்குறைய 7 கிலோ மீற்றர் சென்று, இடப்பக்கம் திரும்பி, களுன்தெவ வீதி வழியே இதே வீதியை எல்லையாகக் கொண்டு வலப்பக்கத்தில் அமைந்துள்ள விற்பனைக்குரிய இவ்வாதனத்தை அடைவதற்கு ஏறக்குறைய 500 மீற்றர் செல்லவும்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2014, ஓகத்து 8 ஆந் திகதி திங்கட்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வோம்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2013, நவெம்பர் 22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2014, மாச்சு 18 ஆந் திகதிய "லக்பிம", "தினகரன்" மற்றும் "டெயிலி மிரர்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் மீது 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனும் இருப்பின்) ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய இலங்கை அரசினால் அல்லது வேறேதேனும் அதிகார சபையினால் அமுலாக்கப்பட்டு எப்போதும் ஏற்புடைத்தான கட்டணங்கள், வரிகள், வரிக்கட்டணங்கள் அல்லது வேறேதேனும் வரிகள் ஆகியவற்றுடன் சேர்த்து கொள்வனவு விலையின் மிகுதி 90%.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 10, ரீ. பி. ஜயா மாவத்தை, இல. 479, ஹற்றன் நஷனல் வங்கி பி. எல். சி., உதவிப் பொது முகாமையாளர்-அறவீடுகள்" அவர் களிடம் பார்வையிட முடியும். தொலைபேசி இல. : 011-2661816 ; தொலைநகல் இல. 011-2661835.

டல்லாஸ் கெலார்ட்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 146/3, கல்தேரா கார்டின்ஸ்,
துட்டுகெமுனு தெருவிற்கப்பால்,
கொஹுவளை.
தொலைபேசி இல. : 011-4302622, 011-4302623.
தொலைநகல் இல. : 011- 2856013.

7-570

**ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. – தெஹிவளை கிளை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள், பம்பலப்பிட்டி வட்டாரம், கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ளதும், காலி வீதி, வரிமதிப்பு இல. 451 ஐக் கொண்டதும் "லியன்வோர்ன்" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவை யாளர் சீ. எச். டயஸ் அபேகுணவர்தன அவர்களால் தயாரிக்கப் பட்டு, 1985, நவெம்பர் 03 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 448 இல் குறிப்பிடப்பட்டு துண்டு இல. ஏ என அடையாள மிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 20.38பே.)**

*(கடப்பாடுடையவரான பீ சீ ஹவுஸ் பீஎல்சீ இற்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.**- இவ்விடயத்தில் பெறுமதியிடப் படவிருக்கும் ஆதனத்தை பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து காலி வீதி வழியே கொள்ளுப்பிட்டி அல்லது கொழும்பு நோக்கி ஏறக்குறைய 300 மீற்றர் பயணித்தால் அடைய முடியும். இது காலி வீதியின் வலப்பக்கத்தில் காணப்படும்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2014, ஒகத்து 5 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 9.30 மணிக்கு அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வோம்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- 2013, ஒற்றோபர் 11 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2013, நவெம்பர் 5 ஆந் திகதிய "லக்பிம", "தினகரன்" மற்றும் "டெயிலி மிரர்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் மீது 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனும் இருப்பின்) ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய இலங்கை அரசினால் அல்லது வேறேதேனும் அதிகார சபையினால் அமுலாக்கப்பட்டு எப்போதும் ஏற்புடைத்தான கட்டணங்கள், வரிகள், வரிக்கட்டணங்கள் அல்லது வேறேதேனும் வரிகள் ஆகியவற்றுடன் சேர்த்து கொள்வனவு விலையின் மிகுதி 90%.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 10, ரீ. பி. ஜயா மாவத்தை, இல. 479, ஹற்றன் நஷனல் வங்கி ப. வ. க., உதவிப் பொது முகாமையாளர்-அறவீடுகள்" அவர் களிடம் பார்வையிட முடியும். தொலைபேசி இல. : 011-2661816 ; தொலைநகல் இல. 011-2661835.

டல்லாஸ் கெலார்ட்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 146/3, கல்தேரா கார்டின்ஸ்,
துட்டுகெமுனு தெருவிற்கப்பால்,
கொஹுவளை.
தொலைபேசி இல. : 011-4302622, 011-4302623.
தொலைநகல் இல. : 011- 2856013.

7-569

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, றாகம்பற்று, வத்தளை-மாபோலை நகர சபை எல்லைகளுக்குள், வத்தளையில் அமைந்துள்ளதும் ஹேகித்தை, 3 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பு இல. 36/6, 36/6ஏ, 36/6பி, 36/6சீ ஐக் கொண்டதும் "கெந்தகேவத்தை மற்றும் போலந்தபத்திரகேவத்தை மற்றும் கும்புற" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் காமினி பி. தொடன்வெல அவர்களால் தயாரிக்கப்பட்டு 2010.08.16 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 8030 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப் பட்டது மான காணியினது) கொழும்பு காணிப்பதிவகத்தில் தலைப்பு பி. 1116/87 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். சமரவிக்கிரம அவர்களால் தயாரிக்கப்பட்டு 1999.09.05 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 189/1999 இல் துண்டு 1ஏ இன் வழியேயும் மீதுமான வழியுரிமையுடன் சேர்த்து**

**ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 28.59பே.;
மேலும் திருத்தமாக 0ஏ. 0றூ. 29.95பே.)**

*(மெக்னட் ஸ்ரீல் எனும் பெயர் வடிவிலான நிறுவனத்தின்கீழ் பங்குதாரர்களாக வியாபாரத்தைக் கொண்டுநடாத்தும் கடப்பாடுடைய வரான பெரியசாமி ரமேஷ் மற்றும் ஈடுவைத்தவர் மற்றும் கடப்பாடு டையவரான சுப்பையா சுரேஷ் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவாதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2012.01.27 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டுமுறி இல. 2291 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்.)*

**ஆதனத்தைச் சென்றடையும் வழி**.- கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வீதி வழியே வத்தளை வரை சென்று ஹேக்கித்தை வீதிக்கு இடப்பக்கம் திரும்பி, ஏறக்குறைய 150 மீற்றர் சென்று, 3 ஆவது ஒழுங்கைக்கு வலப்பக்கம் திரும்பி ஏறக்குறைய 25 மீற்றர் சென்று, வீதிக்கு உட்புகு வழியை நோக்கியுள்ள இவ்வாதனத்தை அடைவதற்கு 12 அடி அகல வீதி ஒதுக்கிற்கு மீண்டும் வலப்பக்கம் திரும்பவும்.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனங்களை முறையே 2014, ஒகத்து 13 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு**.- 2013.10.04 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் அதே திகதிய "டெய்லி நியுஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக் கட்டணங்கள் 1% (ஒரு வீதம்) மற்றும் அதேபோன்று பெ. சே. வ. கட்டணங்கள் ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம் ) ;
(4) மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1,500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணங்கள்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும், "கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., முகாமையாளர் - அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-4667229, 011-4667237, 011-4667230, 011-2565573.

பீ. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் பட்டய ஏலதாரர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 0777-672082.
தொலைநகல் இல. : 2871184.

7-581

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏலவிற்பனை**

எஸ். எம். விஜேதுங்க மற்றும் டபிள்யூ. ஈ. எல். வை. சாந்தனி எனும் டபிள்யூ. வை. சீ. ஈ. சாந்தனி - கணக்கு இல. 0026 5001 6613

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2010.03.25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.10.15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2010.10.05 ஆந் திகதிய "திவயின", "ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, பதினாறு இலட்சத்து பதினெட்டாயிரத்து எழுநூற்றிருபத்துமூன்று ரூபா பத்து சதம் (ரூ. 16,18,723.10) 2010, பெப்புருவரி 9 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை பதினான்கு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து அறுநூற்றெழுபத் தொன்பது ரூபா தொண்ணூற்றொரு சதம் (ரூ. 14,68,679.91) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபது வீதமும் (20%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2014.08.06 ஆந் திகதி பி. ப. 2.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், தெற்கு களுத்துறை தொட்டமுனே களுத்துறை பெத்தையில் களுத்துறை பிரதேச சபை எல்லைகளுக்குள் பாலத்தொட்டையில் அமைந்த "மில்லகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். பீ. ஏ. ஜயவிக்கிரம என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, ஒற்றோபர் 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 11151 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 3ஏ எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : இல. 425 எனும் வரைபடத்தில் லொட் 31 (10 அடி அகல வீதி) ; கிழக்கு : இல. 425 எனும் வரைபடத்தில் லொட் 30 (வீதி) ; தெற்கு : இல. 425 எனும் வரைபடத்தில் லொட் 30 ; மற்றும் மேற்கு : எஸ். சமரநாயக்க உரிமம்கோரும் இல. 425 எனும் வரைபடத்தில் லொட் 2 ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பதினாறு தசம் நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 16.4பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 11151 எனும் வரைபடத்திற்கு அமைவாக களுத்துறை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் ஜீ 245/ 226 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வழி மீது பிரவேசிக்கும் மற்றும் மார்க்க உரிமைகளுடன் கூடியது :-

மேற்கூறப்பட்ட களுத்துறை பெத்தையில் களுத்துறை பிரதேச சபை எல்லைகளுக்குள் பாலத்தொட்டையில் அமைந்த ''மில்லகாஹாவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சிரி போப்பெ ஆரச்சி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1988, ஓகத்து 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 425 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 3 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : லொட் 31 ; கிழக்கு : லொட் 30 ; தெற்கு : லொட் 30 ; மற்றும் மேற்கு : லொட் 2 ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பதினாறு தசம் நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 16.4பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 425 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-574/1

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

சீ. எஸ். பீ. சந்ரசேகர - கணக்கு இல. 1013 5325 2028

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2010.10.21 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2011.07.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2011.07.06 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலன்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, இருபத்தெட்டு இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து முன்னூற்றெழுபத்தைந்து ரூபா பதினைந்து சதம் (ரூ. 28,98,375.15) 2010, செத்தெம்பர் 02 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை இருபத்தெட்டு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து தொளாயிரத்தறுபத்துமூன்று ரூபா முப்பத்தொன்பது சதம் (ரூ. 28,76,963.39) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபது வீதம் (20%) மீது அறவிடப்படும் வட்டி வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2014.08.06 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலே பல்லேபத்துவின் மஹரகமை நகர சபை எல்லைகளுக்குள் பத்திரகொடையில் அமைந்த ஜனத்தா மாவத்தை, வரிமதிப்பீட்டு இல. 103 ஐ ஏற்ற ''பெலன்காஹாவத்த'' என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஏ. ஜயரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, சனவரி 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 5396 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் ஏ2 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: ஆர்1 (15 அடிகள் அகல வீதி) ; கிழக்கு : ஜனத்தா மாவத்தை ; தெற்கு : லொட் ஏ1 ; மற்றும் மேற்கு : லொட் ஏ இன் எஞ்சிய பகுதி ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பன்னிரண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் , நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள் இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 5396 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

குறிப்பிடப்பட்ட லொட் ஏ2 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :-

மேற்கூறப்பட்ட பத்திரகொடையில் அமைந்த ஜனத்தா மாவத்தை, வரிமதிப்பீட்டு இல. 103 ஐ ஏற்ற ''பெலன்காஹாவத்த'' என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. எச். பீ. பெர்னாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1983, ஒற்றோபர் 1 ஆந் திகதியிடப்பட்ட இல. 1802 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் ஏ2 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: ஆர்1 (15 அடிகள் அகல வீதி) ; கிழக்கு : ஜனத்தா மாவத்தை ; தெற்கு : லொட் ஏ1 ; மற்றும் மேற்கு : லொட் ஏ இன் எஞ்சிய பகுதி ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பன்னிரண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள் இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1802 எனும் வரைபடத்திற்கு அமைவாக கல்கிஸ்ஸ காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் எம் 2501/188 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-574/2

**சம்பத் வங்கி பீஎல்சீ**

*(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)*

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

ஹினிதும்பத்து பிளான்ட்டேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் - கணக்கு இல. 0035 1000 7262

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2014.01.09 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2014.03.28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2014.03.17 ஆந் திகதிய ''திவயின'', ''ஜலன்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, ஐம்பத்துமூன்று இலட்சத்து எழுபத்தேழாயிரத்து நானூற்றைம்பத்துநான்கு ரூபா தொண்ணூற்றிரண்டு சதம் (ரூ. 53,77,454.92) 2013, நவெம்பர் 13 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை பத்தொன்பது இலட்சம் ரூபா (ரூ. 19,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) மேலும் முப்பது இலட்சம் ரூபா (ரூ. 30,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு தசம் ஐந்து வீதம் (17.5%) மீது அறவிடப்படும் வட்டி, வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரர்களான சொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்கள் மூலமாக 2014.08.12 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீ.எல்.சீ இத்தால் தீர்மானிக்கின்றது.*

**அட்டவணை**

தென் மாகாணம், காலி மாவட்டம், ஹினிதும் பத்துவை ஹபரகட, கிழக்கு ஹபரகட, கிராம சேவகர் பிரிவில் அமைந்த ''நாரகொப்புவாவ'' (வழக்கு இல. P/ 5485) காலி மாவட்ட நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அட்டவணையில்) என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஃப். குருகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1979, மே 08 ஆந் திகதியிடப்பட்ட 2367P எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 38B, 40, 41 மற்றும் 42 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : காணியின் லொட் 38A மற்றும் அரச காணி ; கிழக்கு : அரச காணி மற்றும் இக் காணியின் லொட் 43 ; தெற்கு : ஹினிதும முதல் நெலுவ வரையான பிரதான வீதி மற்றும் இக் காணியின் லொட் 39 ; மேற்கு: இக் காணியின் லொட்கள் 39 மற்றும் 44 (வீதி) ஆகிய இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் நான்கு தசம் இரண்டு இரண்டு ஐந்து ஆறு பேர்ச் (1ஏ. 0றூ. 4.2256பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2367P எனும் வரைபடத்திற்கு அமைவாக காலி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் W 01/25 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*அண்மைய நில அளவீட்டிற்கு அமைவாக -*

கூறப்பட்ட கிழக்கு ஹபரகட, கிராம சேவகர் பிரிவில் அமைந்த ''நாரகொப்புவாவ'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. வீ. பீ. பி. கீர்த்திலால் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, செத்தெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட 883 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : 2367 எனும் வரைபடத்தின் லொட் 38A மற்றும் அரச காணி ; கிழக்கு : அரச காணி மற்றும் இல. 2367 எனும் வரைபடத்தின் லொட் 43 ; தெற்கு: ஹினிதும முதல் நெலுவ வரையான பிரதான வீதி மற்றும் இக் காணியின் லொட் 39 ; மற்றும் மேற்கு: இக்காணியின் லொட்கள் 39 மற்றும் தோட்டத்தை அடையும் வீதி ஆகிய இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் நான்கு பேர்ச் (1ஏ. 0றூ. 4 பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 883 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-574/3

---

**தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பகிரங்க ஏல விற்பனை**

*மட்டக்குளி, சேர்ச் வீதியில் 176/4, 186 ஆம் வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்ட பரப்பளவில் 0ஏ. 2றூ. 20.53பே. கொண்ட பெறுமதிவாய்ந்த காணியும் கட்டிடமும்*

மேல் மாகாணம், கொழும்பு மாநகரப் பிரதேசத்தினுள்ளும் மாவட்டத்தினுள்ளும் மட்டக்குளி 1 ஆம் இலக்க வட்டாரத்தில் மட்டக்குளி சேர்ச் வீதி வழியாக அமைந்துள்ளதும், மட்டக்குளி சேர்ச் வீதியில் 176/4, 186 ஆம் வரிமதிப்பீட்டிலக்கங்களைத் தற்போது கொண்டதும்,

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. டபிள்யூ. கார்வல்ஹோ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.04.25 ஆந் திகதிய 54/2011 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் எக்ஸ் மற்றும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பீ. வேதாசலம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 185ஏ/97 ஆம் இலக்க வரைபடத்தில் காணித் துண்டங்கள் வை2ஏ, வை2பி, வை2சீ, வை2டீ மற்றும் வை2ஈ எனக் குறித்துக்காட்டப்பட்டதுமான காணியின் மீள் நிலஅளவையும் ஒன்றுசேர்க்கையாகவுள்ளதும், அதன் மீதுள்ள கட்டிடங்களுடன் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. டபிள்யூ. கார்வல்ஹோ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011, ஓகத்து 11 ஆந் திகதிய 102/2011 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் ஏ என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்.

இலங்கையில் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்டதும், அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொழும்பு 3 இல் கொண்டுள்ளதும், (முன்னர் பீசீ ஹவுஸ் (பீவீரீ) லிமிட்டெட் என அறியப்பட்டதுமான) பீசீ ஹவுஸ் பீஎல்சீ, தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ சார்பில் 146 ஆம் இலக்க ஈட்டுமுறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால், சொல்லப்பட்ட வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் 2014, ஓகத்து 4 ஆந் திகதியன்று பி. ப. 2.45 மணிக்கு தலத்தில் வைத்து மேலேயுள்ள ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்வேன்.

**மேலதிக விபரங்களுக்காக.**- 2014.05.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும், 2014.04.28 ஆந் திகதிய ''த ஐலண்ட்'', ''திவயின'' மற்றும் ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.**- புறக்கோட்டை காண் மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியிலிருந்து என். எச். எம். அப்துல் காதர் வீதி, கடற்கரை வீதி, சென்ட் அந்தனீஸ் மாவத்தை மற்றும் ஸ்ரீமத் ராமநாதன் மாவத்தை வழியாக ஏறத்தாழ 2.6 கி. மீ. சென்று மட்டக்குளியில் ராசமுனகந்த சந்தியைச் சென்றடைவதற்கு எச். ஜே. பெரேரா மாவத்தை மற்றும் அளுத் மாவத்தை வீதியில் இன்னுமொரு 1.8 கி. மீ. செல்லவும். பின்னர் மட்டக்குளி சென்ட்டர் வீதியில் ஏறத்தாழ இன்னுமொரு 700 மீற்றர்கள் பயணித்து மட்டக்குளி பாம் வீதிக்கு வலதுபக்கம் திரும்பி மட்டக்குளி சேர்ச் வீதியைச் சந்திப்பதற்கு ஏறத்தாழ 375 மீற்றர்கள் பயணித்து (பொதுவாக பஸ் ஸ்டான்ட் சந்தி என அறியப்படும்) மட்டக்குளி பாம் வீதி-ஸ்ரீ விக்ரம மாவத்தைச் சந்திக்கு வலது பக்கம் திரும்பவும். இடது பக்கத்தில் மட்டக்குளி சேர்ச் வீதிக்கருகே பஸ் ஸ்டான்ட் சந்தியிலிருந்து 30 மீற்றர் தூரத்தினுள் ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவுகளைச் செய்யும் முறை.**- ஏல விற்பனை முடிவுற்றதன் பின் வெற்றிபெற்ற கொள்வனவாளர் பின்வரும் பணத்தைக் காசாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ; (2) உள்ளூரதிகார சபை விதிப்பனவுகளும் அவற்றின் மீதான சேர்பெறுமதி வரியும் 1% ; (3) ஏலவிற்பனையாளரின் விதிப்பனவுகள் 2 1/2% ; (4) விளம்பரக் கட்டணங்களின் முழுச் செலவும் (5) எழுதுவினைஞரினதும் கூவுநரினதும் கட்டணமான 1,500 ரூபா ; (6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தியமைக்காக நொத்தாரிசுவின் கட்டணமான 3,000 ரூபா முதலியன.

கொள்வனவு விலையின் மிகுதி 90%, ஏல விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்து உறுதிகளையும் ஏனைய ஆவணங்களையும் பார்வையிடுவதற்காக கொழும்பு 2, நவம் மாவத்தை, 40 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீயைச் சேர்ந்த முகாமையாளர், சட்ட அறவீடுகள் என்பவருடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல.: 2448448, 011-7448448.

பீ. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், பெறுமான மதிப்பீட்டாளர்,
பட்டயம்பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 0777-672082.
தொலைநகல் இல. : 2871184.

7-563

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

### பகிரங்க ஏல விற்பனை

நீர்கொழும்பு மாநகரசபை எல்லைகளினுள் ஹுணுபிட்டிய, 2 ஆம் பிரிவு, பிரதான வீதியில் 347/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட பரப்பளவில் பதினைந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 15பே.) கொண்ட பெறுமதிவாய்ந்த காணியும் கட்டிடமும்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் (நீர்கொழும்புப் பதிவுப்பிரிவு), நீர்கொழும்பு மாநகரசபை எல்லைகளினுள் ஹுணுபிட்டிய, 2 ஆம் பிரிவில் அமைந்துள்ளதாய் இப்போது ''க்ளயார்'' என அறியப்படும் சபுகஹாவத்த என அழைக்கப்படும் காணியினதாயும் பிரதான வீதியில் 347/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வளவுகளினதாயும் (உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜே. எம். ஜீ. டயஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992, பெப்புருவரி 22 ஆந் திகதிய 1681/ஏ/92 ஆம் இலக்க வரைபடத்தில் அதே காணித்துண்டமாக வுள்ளதும்), ஹியூ எல் குறூஸ் தப்ரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2006, ஒற்றோபர் 17 ஆந் திகதிய 9044/2006 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்.

இலங்கையில் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக வுள்ளதும், அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை கொழும்பு 3 இல் கொண்டுள்ளதும், (முன்னர் பீசீ ஹவுஸ் (பீவீரீ) லிமிட்டெட் என அறியப்பட்டதுமான) பீசீ ஹவுஸ் பீஎல்சீ (கடன் பெறுநர்), தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ சார்பில் 624, 144 ஆம் இலக்க முறிகள் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால், சொல்லப்பட்ட வங்கி யினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் 2014, ஓகத்து 4 ஆந் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு தலத்தில் வைத்து மேலேயுள்ள ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்வேன்.

**மேலதிக விபரங்களுக்காக.**- 2014.05.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும், 2014.04.28 ஆந் திகதிய ''த ஐலண்ட்'', ''திவயின'' மற்றும் ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.**- நீர்கொழும்பு பிரதான பஸ் ஸ்டான்ட்டிலிருந்து ஏறத்தாழ 400 மீற்றர் தூரத்துக்குப் பிரதான வீதி வரை கிறீன்ஸ் வீதி வழியாகச் சென்று வலது பக்கத்துக்குத் திரும்பவும்.

**கொடுப்பனவுகளைச் செய்யும் முறை.**- ஏல விற்பனை முடிவுற்றதன் பின் வெற்றிபெற்ற கொள்வனவாளர் பின்வரும் பணத்தைக் காசாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ; (2) உள்ளூரதிகார சபை விதிப்பனவுகளும் அவற்றின் மீதான சேர்பெறுமதி வரியும் 1% ; (3) ஏலவிற்பனையாளரின் விதிப்பனவுகள் 2 1/2% ; (4) விளம்பரக் கட்டணங்களின் முழுச் செலவும் ; (5) எழுதுவினைஞரினதும் கூவுநரினதும் கட்டணமான 1,500 ரூபா ; (6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தியமைக்காக நொத்தாரிசுவின் கட்டணமான 3,000 ரூபா முதலியன.

கொள்வனவு விலையின் மிகுதி 90%, ஏல விற்பனைத் திகதியி லிருந்து 30 நாட்களினுள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்து உறுதிகளையும் ஏனைய ஆவணங்களையும் பார்வையிடுவ தற்காக கொழும்பு 2, நவம் மாவத்தை, 40 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீயைச் சேர்ந்த முகாமையாளர், சட்ட அறவீடுகள் என்பவருடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல.: 2448448, 011-74484480.

பீ. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், பெறுமான மதிப்பீட்டாளர்,
பட்டயம்பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 0777-672082.
தொலைநகல் இல. : 2871184.

7-564

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

### பகிரங்க ஏல விற்பனை

மட்டக்குளி, சேர்ச் வீதியில் 176 ஆம் இலக்கத்தில் கிடக்கின்ற மற்றும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள கணினி வன்பொருள் மற்றும் உதிரிப்பாகங்களுட்பட வியாபாரக் கையிருப்பு, வணிகப் பொருட்கள், நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை, மூலப்பொருட்கள் மற்றும் செய்துமுடித்த பண்டங்களின் முழுமை அடங்கலும்

மட்டக்குளி, சேர்ச் வீதி, 176 ஆம் இலக்கத்திலும் அதன் மீதும் இப்போது கிடக்கின்ற அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள கணினி வன்பொருள் மற்றும் உதிரிப்பாகங்களுட்பட வியாபாரக் கையிருப்பு, வணிகப் பொருட்கள், நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை, மூலப்பொருட்கள் மற்றும் செய்துமுடித்த பண்டங்களின் முழுமை அடங்கலும் மற்றும் கடப்பாட்டாளர் இப்போது தொழில் கொண்டுநடாத்துகின்ற அல்லது இதன் பின்னர் எந்நேரத்திலும் தொழில் கொண்டுநடாத்தக்கூடிய மற்றும் அதில் அல்லது அதன் மீது சொல்லப்பட்ட வியாபாரக் கையிருப்பு காலத்துக்குக்காலம் களஞ்சியப்படுத்தப்படக்கூடிய அல்லது வைத்திருக்கப்படக்கூடிய வேறேதேனும் கிட்டங்கியில், களஞ்சியத்தில் அல்லது வளவுகளிலும் அவற்றின் மீதும் இப்போது இருக்கின்ற ஒவ்வொரு வகையினவையும் விவரணத்தினவையுமான வேறெல்லா அசைவுள்ள ஆதனங்களும் மற்றும் காலத்துக்குக்காலமும் எல்லா நேரங்களிலும் கடப்பாட்டாளருக்குச் சொந்தமாகவிருக்கவேண்டிய அல்லது சொந்தமாகவிருக்கக்கூடிய அல்லது மேற்கூறப்பட்ட வளவுகளினுள் அல்லது அவற்றின் மீது அல்லது கடப்பாட்டாளர் எந்நேரத்திலும் காலத்துக்குக்காலமும் அதன் தொழிலை அல்லது வியாபாரத்தை இதன் பின்னர் அப்புறப்படுத்தி அதனைக் கொண்டு நடாத்தக்கூடிய அல்லது மேற்கூறப்பட்ட வியாபாரக் கையிருப்பைக் களஞ்சியப்படுத்தக்கூடிய வேறெவையேனும் வளவுகளினுள் அல்லது அவற்றின் மீது மேற்கூறப்பட்ட வியாபாரக் கையிருப்பை மாற்றீடு செய்வதற்குக் கொண்டுவரவேண்டிய அல்லது கொண்டுவரக்கூடிய எல்லா வியாபாரக் கையிருப்புகளும் அல்லது மேற்கூறப்பட்ட வளவுகளுக்கு அல்லது அவற்றிலிருந்து இடைப்பெயர்விலுள்ள அல்லது கொழும்பு மாவட்டத்தில் அல்லது வேறெங்கேனுமுள்ள துறை மேடையில் அல்லது குதத்தில் கப்பலேற்றப்படுவதற்கு அல்லது விடுவிக்கப்படுவதற்குக் காத்திருக்கின்ற மற்றும் கடப்பாட்டாளர் இப்போது தொழில் கொண்டு நடாத்துகின்ற அல்லது இதன் பின்னர் தொழில் கொண்டுநடாத்தக்கூடிய அல்லது சொல்லப்பட்ட வியாபாரக் கையிருப்பு அப்போதைக்குக் களஞ்சியப்படுத்தப்படுகின்ற அல்லது வைத்திருக்கப்படுகின்ற வளவுகளிலுள்ள எல்லா வியாபாரக் கையிருப்புகளும் பின்வருவனவற்றுடன் கடன்பெறுநரின் புத்தக மற்றும் வேறு தனிசுகளும்.

| *Item Code* | *Description* | *Qty.* |
|---|---|---|
| DIGOEMOll | Digital Recorder ANX-1670+DV New Mid Class MPEG4 16CH DVR without CD/RW and with DVD RW/VG Board | 3 |
| DIGOEM006 | Digital Recorder ANX-440 JPEG 4CH DVR without Network Board. | 2 |
| DIGOEM005 | Digital Recorder ANX-440N JPEG 4CH DVR 4 channel with Network Board. | 1 |
| DIGOEM008 | Digital Recorder ANX-870 UV Mid Class MPEG 4 8CH with VGA/USB to IDE and without CDRW/DVD RW | 1 |
| DIGOEM009 | Digital Recorder ANX-1670 UV Mid Class MPEG 4 16CH with VGAl/USB to IDE and without CDRW/DVD RW | 3 |

| *Item Code* | *Description* | *Qty.* |
|---|---|---|
| SAMSUNG CDRSAM002 | CD ROM SAMSUN 52X Black | 1 |
| SAMSUNG CMBSAM002 | COMBO DRIVE SAMSUNG Black | 1 |
| SAMSUNG DWRSAM006 | DVD WRITTER SAMSUNG 22X SATA BLACK | 6 |
| SAMSUNG MONSAM014 | MONITOR SAMSUNG 17" LCD WIDE SCREEN ( 740NW ) | 1 |
| SAMSUNG PRISAM023 | PRINTER SAMSUNG LASER ML -2570 | 19 |
| SAMSUNG RAMSAM010 | RAM SAMSUNG LAPTOP 512 MB DDR 2 (667) | 1 |
| SAMSUNG RAMSAM008 | RAM SAMSUNG 512MB DDR2 ( 667 ) | 1 |
| SAMSUNG CDRSAM002 | CD ROM SAMSUNG 52X BLACK | 27 |
| SAMSUNG CMBS AM003 | COMBO DRIVE SAMSUNG SATA BLACK | 33 |
| SAMSUNG DVRSAM003 | DVD ROM SAMSUNG SAT A | 30 |
| DVRSAM002 | DVD ROM SAMSUNG BLACK | 41 |
| SAMSUNG DWRSAM003 | DVD WRITTER SAMSUNG 20X SATA BLACK | 1 |
| SAMSUNG DWRSAM006 | DVD WRITTER SAMSUNG 20X SATA BLACK | 33 |
| SAMSUNG HDDSAM004 | HARD DISK SAMSUNG 80 GB SATA | 5 |
| SAMSUNG RAMSAM003 | RAM SAMSUNG 256 MB DDR2 ( 533 ) | 26 |
| SAMSUNG CARSAM005 | CARTIDGE SAMSUNG M40 | 6 |
| SAMSUNG CDRSAM002 | CD ROM SAMSUNG 52 X BLACK | 145 |
| SAMSUNG CMBSAM002 | COMBO DRIVE SAMSUNG BLACK | 6 |
| SAMSUNG CMBSAM003 | COMBO DRIVE SAMSUNG SATA BLACK | 72 |
| SAMSUNG DVRSM002 | DVD ROM SAMSUNG BLACK | 4 |
| SAMSUNG DWRSAM003 | DVD WRITTER SAMSUNG 20X SATA BLACK | 14 |
| DWRSAM005 | DVD WRITTER SAMSUNG SLIM EXTERNAL | 1 |
| DWRSAM006 | DVD WRITTER SAMSUNG 22X SATA BLACK | 16 |
| DWRSAM007 | DVD WRITTER SAMSUNG SATA BLACK LIGHTSCRIBE | 41 |
| SAMSUNG MONSAM010 | MONITOR SAMSUNG 19"LCD WIDE SCREEN (920NW) | 18 |
| MONSAM001 | MONITOR SAMSUNG 15" BLACK | 128 |
| SAMSUNG CARSAM005 | CARTIDGE SAMSUN DG M 40 | 43 |
| SAMSUNG CDRSAM002 | CD ROM SAMSUNG 52 X BLACK | 390 |
| SAMSUNG CDWSAM002 | CD WRITTER SAMSUNG 52X 32X 52X BLACK | 1 |
| SAMSUNG DVRSAM002 | DVD ROM SAMSUNG BLACK | 145 |
| SAMSUNG DVRSAM003 | DVD ROM SAMSUNG SATA | 170 |
| SAMSUNG DWRSAM006 | DVD WRITTER SAMSUNG 22X SATA BLACK | 29 |
| SAMSUNG DWRSAM007 | DVDWRITTER SAMSUNG SATA BLACK LIGHTSRIBE | 10 |
| SAMSUNG DWRSAM002 | DVD WRITTER SAMSUNG BLACK | 10 |
| SAMSUNG HDDSAM006 | HARD DISK SAMSUNG 160 GB SATA | 280 |
| SAMSUNG MONSAM011 | MONITOR SAMSUNG 17" BLACK 794 MG | 1 |
| MONSAM012 | MONITOR SAMSUNG 19" LCD WIDE SCREEN (920 NW) | 35 |
| MONSAM001 | MONITOR SAMSUNG 15 BLACK | 235 |
| SAMSUNG RAMSAM011 | RAM SAMSUNG 1GB DDR PC-2100 | 2 |
| RAMSAM012 | RAM SAMSUNG 1GB DDR PC-2700 CL2ECC | 2 |

*இலங்கையில் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகவுள்ளதும், அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொழும்பு 3 இல் கொண்டுள்ளதும், (முன்னர் பீசீ ஹவுஸ் (பீவீரீ) லிமிட்டெட் என அறியப்பட்டதுமான) பீசீ ஹவுஸ் பீஎல்சீ (கடன் பெறுநர்) தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ சார்பில் எப்ஏசீ/ 243/ 2010/ என்எஸ்/ சீடபிள்யூ, 142, 143, 911 மற்றும் 674 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால், சொல்லப்பட்ட வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் 2014, ஓகத்து 4 ஆந் திகதியன்று பி. ப. 2.00 மணிக்கு தலத்தில் வைத்து மேலேயுள்ள ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்வேன்.*

***மேலதிக விபரங்களுக்காக.*** *- 2014.05.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியையும், 2014.04.28 ஆந் திகதிய "த ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

***கொடுப்பனவுகளைச் செய்யும் முறை.*** *- ஏல விற்பனை முடிவுற்றதன் பின் வெற்றிபெற்ற கொள்வனவாளர் பின்வரும் பணத்தைக் காசாகச் செலுத்துதல் வேண்டும் :-*

*(1) முழுக் கொள்வனவு விலையும் ; (2) உள்ளூரதிகாரசபை விதிப்பனவு 1% மும் சேர்பெறுமதி வரியும் ; (3) ஏலவிற்பனையாளரின் விதிப்பனவுகள் 2 1/2% ; (4) விளம்பரக் கட்டணங்களின் முழுச் செலவும் ; (5) எழுதுவினைஞரினதும் கூவுநரினதும் கட்டணமான 1,500 ரூபா.*

மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு 2, நவம் மாவத்தை, 40 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீயைச் சேர்ந்த முகாமையாளர், சட்ட அறவீடுகள் என்பவருடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல.: 2448448, 011-74484480.

பீ. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், பெறுமான மதிப்பீட்டாளர்,
பட்டயம்பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 0777-672082.
தொலைநகல் இல. : 2871184.

7-565

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.